


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூன் 02, 2022 | புரட்சி 21 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00


## செஞ்சட்டைப் பேரணி மாநாட்டில் கொளத்தூர் மணி உரை

# கொள்கை எதிரியை அடையாளம் கண்டு விட்டோம்; கொள்கை அணியை உருவாக்குவோம்!

***தி.க. கொடியை உருவக்கிய பெரியார், நடுவில் உள்ள சிவப்பு வட்டம் பெரிதாகி, சிவப்புக் கொடியாக மாறும் என்று கூறியதை நினைவு கூர்ந்தார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. மதுரை செஞ்சட்டை பேரணிக்குத் தலைமை யேற்ற கழகத் தலைவர் மாநாட்டில் ஆற்றிய உரை:***

பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் நோக்கத்தை ஒருங்கிணைப்பாளர் பொழிலன் விளக்கியிருக்கிறார். இந்த மூன்று பேரணிகள் நடந்ததும் இதன் முதன்மை மாந்தர்களாக காட்டப்படுகிற பெரியாரும், அம்பேத்கரும், மார்க்சும் எளிய வஞ்சிக்கப்பட்ட மக்களை இலக்காக கொண்டு தத்துவங்களை உருவாக்கிப் போராடியவர்கள். இந்த மண்ணில், சுரண்டப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்கள் இன்னும் இருக்கிறார்கள். அந்த சூத்திரர்களும், பஞ்சமர்களும் தான் உழைப்புச் சுரண்டல்களுக்கு உள்ளானவர்களாக இருக் கிறார்கள். இந்த மூன்று பேரின் நோக்கமும் ஒன்று தான். ஆனால், தனித்தனியாக இயங்கி வந்திருக் கிறோம். இது இயங்கக் கூடாது என்ற கருத்து 30'களில் தோன்றியிருந்தாலும், இடையில் பிரிவு, உறவு இரண்டும் நடந்திருக்கின்றன. ஆனால், இந்த வேளையில், இந்த நாட்டில் வடபுலத்தில் தலைவிரித்தாடிய மதவெறி கொண்ட ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தம், தமிழ் மண்ணில் அதன் அரசியல் பிரிவை நுழையவிட்டு அதற்கு பின்னால் இந்த சித்தாந்தத்தை நிறுவ விரும்புகிறார்கள். களத்தில் அவர்கள் வெற்றி பெறாமல் இருந்திருக்கலாம். ஆனால், சித்தாந்தத்தை உள் நுழைத்தலில் அவர்கள் வெற்றி பெற்றுதான் இருக்கிறார்கள். அவர்கள் மெல்ல மெல்ல நம்மையும் இந்துக்களாக மாற்ற முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அது நடைமுறையில் வெற்றி பெற்று





விடக்கூடும் என்ற சூழலில் தான், நாம் இணைந்து நின்று செயல்பட வேண்டிய நேரத்தில் இந்த பேரணிகளில் இணைந்து நின்றோம். அவர்களை அரசியலில் இருந்து மட்டுமல்ல, சித்தாந்த ரீதியிலும் முறியடிப்போம் என்ற ரீதியில் தான் இந்த பேரணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பெரியார் இயக்கம் கண்ட போது அதன் கொடியை திராவிடர் கழகத்திற்கு உருவாக்குகிற போது, கருப்பு நடுவிலே சிவப்பு வட்டம் என்று கூறினார். அதோடு பெரியார் விட்டுவிடவில்லை, இந்த சிவப்பு வட்டம் விரிவடைந்து சிவப்பு கொடியாக மாறும் என்று கூறினார். இப்போது அதன் தேவை அதிகமாக இருக்கின்றது. பேரணிக்கான ஒற்றுமை என்று கருதாமல், இது கொள்கை ஒற்றுமை, ஒற்றுமையாக இருக்க வேண்டியவர்கள் பங்காளிகளாக ஆங்காங்கே செயல்பட்டு வருகிறோம்; இது கொள்கை அணியாக மாற வேண்டும்.

கொள்கை ஒற்றுமை கொண்ட நாம், கொள்கை எதிரியை அடையாளம் கண்டிருக்கிறோம். ஆனால், வீழ்த்துவதற்கான நெறிமுறைகளை, வழிமுறைகளை, போராட்டங்களை எடுப்போம். பெரியார் திருச்சி உறையூரில் 1972 இல் “கம்யூனிசம்” என்ற தலைப்பிலேயே உரையாற்றியிருக்கிறார். அவர் மறைவதற்கு முன்பு 1973 அக்டோபரில் “சமதர்மம்” என்ற கட்டுரையை எழுதுகிறார். அதில் பொதுவுடைமையின் தேவையை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆனால், பெரியாரியிலர்களாகிய நாம் தான் அதை சரியாகப் பின்பற்றவில்லை. அந்த களங்கத்தையும் நீக்கிக் கொள்வோம். அனைவரும் இணைந்து, வர்க்க பேதமற்ற, வர்ண பேதமற்ற சமுதாயத்தை படைப்பதில் ஒன்றிணைவோம், ஒன்றிணைந்து போராடுவோம் என்று கூறிக் கொள்கிறேன்.

# வர்க்க–வர்ண ஆதிக்க ஒழிப்புக்கு இளைஞர்கள் சூளுரை : செஞ்சட்டைக் கடலில் மதுரை








பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மதுரையில் மே 29 அன்று நடந்த செஞ் சட்டைப் பேரணியால் மதுரை குலுங்கியது. கருஞ்சட்டைப் பேரணி, நீலச் சட்டைப் பேரணிகளைத் தொடர்ந்து செஞ் சட்டைப் பேரணிக்கு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருமான கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். மதுரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு முழுது மிருந்தும் இளைஞர்கள் பெண்களும் ஆண்களு மாய் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து பார்ப்பனிய பாசிசத்தை வீழ்த்துவோம்; இந்தியாவில் ஒற்றை ஆட்சியைத் திணிக்காதே; இது பெரியார் மண் - சனாதன சக்திகளை அனுமதியோம் என்று உணர்ச்சி முழக்கமிட்டு வந்தனர். திராவிடர் விடுதலைக்கழக சார்பில் சென்னை, மேட்டூர், சேலம், நங்கவள்ளி, கொளத்தூர், மயிலாடுதுறை, நாமக்கல், தூத்துக்குடி உள்ளிட்ட பல ஊர்களிலிருந்து தனிப் பேருந்துகளிலும் வேன்களிலும் திரண்டு வந்திருந்தனர்.

கழகப் பெயருடன் கழகக் கொடி செஞ் சட்டையில் அச்சிடப்பட்டிருந்தது. விடுதலை சிறுத்தைகள், தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழ்ப் புலிகள் கட்சி, மே 17 இயக்கம், மக்கள் அதிகாரம், மார்க்சிய பெரியாரிய பொது வுடைமைக் கட்சி, திராவிடர் கழகம், நிமிர்வு பறை இசைக் குழு, நிகர்பறை இசைக் குழு, தமிழ்த் தேச விடுதலை முன்னணி, தமிழ்த்தேச நடுவம், தமிழக மக்கள் முன்னணி உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள், செஞ்சட்டை அணிந்து தங்கள் அமைப்பின் கொடிகளுடன் பங்கேற்றனர்.

பழங்காநத்தம் பகுதியில் வர்க்க வர்ண ஆதிக்க ஒழிப்பு மாநாடு, நாகை திருவள்ளுவன் தலைமையில் வாலாஜா வல்லவன் வரவேற் புரையுடன் தொடங்கியது. தொடக்கத்தில் மக்கள் அதிகாரம், கோவன் குழுவினரின் புரட்சி கர கலை நிகழ்ச்சி, கூட்டத்தினரை உணர்ச்சி மயமாக்கியது. மாநாட்டின் நோக்கத்தை விளக்கி, பொழிலன் உரையாற்றினார். தீர்மானங் களை முன் மொழிந்து கோவை இராம கிருட்டிணன் பேசினார். தொல். திருமாவளவன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சு. வெங்கடேசன், எம்.பி., ஜி. இராமகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி), சந்தானம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), அதியமான் (ஆதித் தமிழர் பேரவை), ஜக்கையன் (ஆதித் தமிழர் கட்சி), வழக்கறிஞர் ப.பா. மோகன், பேராசிரியர் ஜெய ராமன், வெண்மணி (திராவிடர் தமிழர் கட்சி) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் உரையாற்றினர். கூட்டமைப்பு சார்பில் “வீழட்டும், பார்ப்பனியம், சாதியம், முதலாளியம்” நூலை வெளியிட்டு, குடந்தை அரசன் உரையாற்றினார்.

இரவு 11.30 மணி வரை மாநாடு நடந்தது. நிறைவுறையாற்றிய தொல். திருமாவளவன், நான்கு வர்ணம் என்ற சதுர்வர்ணத்தை வீழ்த்த கருப்பு, நீலம், சிவப்பு என்ற மூன்று வர்ணம் போர்ப் படையாகத் திரண்டிருக்கிறது என்றார். மோடியும் அமீத்ஷாவும் பிற்படுத்தப்பட்டோ ராக இருக்கலாம்; அவர்களை இயக்குவது பார்ப் பன மூளை. பிரதமராகும் மோடியால் ஆர்.எஸ். எஸ். தலைவராக முடியுமா என்று கேட்டார்.

இளைஞர்களின் ஒன்றுபட்ட இந்துத்துவ பார்ப்பன எதிர்ப்பின் வெளிப்பாடாக பேரணி எழுச்சியுடன் அமைந்தது.

**– நமது செய்தியாளர்**



தலையங்கம்

## பேரணிகள் முடிந்தன; அடுத்து என்ன?

மதுரையில் பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு, செஞ்சட்டைப் பேரணியை எழுச்சியுடன் நடத்தி முடித்திருக்கிறது. கருப்புச் சட்டை, நீலச் சட்டைப் பேரணியைத் தொடர்ந்து நடத்தப்பட்ட மூன்றாவது பேரணி இது. மார்க்ஸ்–பெரியார்–அம்பேத்கர் கருத்தியல்கள் காலத்தின் தேவையாகியுள்ள சூழலில் நாட்டை பார்ப்பனப் பாசிசத்திலிருந்து மீட்டெடுப்பதற்கான முப்பெரும் தலைவர்களின் பொதுவான கூறுகளை அடையாளம் காண வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. பார்ப்பனப் பாசிசம், மாநில அடையாளங்களை அழித்து ஒற்றை இந்தியாவாக்கி பிறகு அதை பாரத தேசமாக்கி, பாரத தேசத்தை இந்து இராஷ்டிரமாக்கிட வேண்டும் என்பதையே தனது இயக்கமாக நிர்ணயித்திருக்கிறது.

வேதகால பார்ப்பனியம் மனுசாஸ்திரத்தையும் வேதங்களையும் சமூகத்தின் அடையாளங்களாக்கி மக்களை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து மிக எளிதாக அதில் வெற்றியும் பெற்றிருந்தது. மாநில எழுச்சிகள் சமூகநீதிக் கொள்கைகள் மொழி பண்பாட்டு அடையாளங்கள் படிப்படியாக மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கியதன் வழியாக பார்ப்பனியம் கேள்விக்குள்ளானது. அரசியல் சட்டம் மக்கள் சமத்துவத்தையும் மதச்சார்பின்மையையும் உறுதி செய்தாலும் அதில் உடைப்புகளை உருவாக்கிட பார்ப்பனியம் தொடர்ந்து முயன்று வருகிறது. இப்போது ஆர்.எஸ்.எஸ். கொள்கை அதிகாரமே நேரடியாக கோலோச்சும் வாய்ப்பு கிடைத்து விட்டதால் இதைத் தவற விடக் கூடாது என்று உறுதியுடன் செயல்படுகிறார்கள். வரலாற்றில் ஆபத்தான காலகட்டத்தில் நிற்கிறோம். பார்ப்பன எதிர்ப்புடன் கூடிய சமூகநீதி உணர்வு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு மட்டுமே இருக்கிறது.

கேரளா, மேற்கு வங்க மாநிலங்கள், பா.ஜ.க.வின் பாசிச கொள்கைகளை எதிர்த்து நிற்கின்றன. தென் மாநிலங்களில் ஒன்றிய ஆட்சிக்கு எதிரான பொதுவான விழிப்புணர்வு மேலோங்கி வருகிறது. கருநாடகம் மீண்டும் மதவெறிப் பிடிக்குள்ளேயே போய்விட்டது. இந்த நிலையில் வடமாநிலங்களில் மதவாத எதிர்ப்பு சமூகநீதி கருத்துகள் ஆங்காங்கே ஒலிக்கத் தொடங்கினாலும் அது மக்களின் பொதுக் கருத்தாக உருவாக முடியாமல் கண்மூடித்தனமான மதவெறியும் ஜாதி வெறியும் தடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கே வழிகாட்ட வேண்டிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது. கேரளாவில் தமிழ்நாட்டைப் போல பாசிச எதிர்ப்பை உள்ளடக்கிய பொது அணி இன்னும் உருவாகவில்லை.

இந்த நிலையில் அரசியலில் மதத்தைக் கலக்கும் முயற்சிகள், தமிழ்நாட்டு உரிமைகளைப் பறித்தல்; தமிழகக் கல்வி, மருத்துவக் கொள்கைகளை முடக்குதல், இந்தி–சமஸ்கிருதத் திணிப்பு; ஒன்றிய ஆட்சியில் கல்வி நிலையங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றிலும் தமிழர்களின் வேலை வாய்ப்புகளைப் பறிக்கும் முயற்சிகளை முறியடிக்க பொதுவான செயல் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

அரசு நடவடிக்கைகள் ஒரு எல்லைக்கு மேல் பயணிக்க முடியாத நிலையில் மக்கள் கருத்தைக் குறிப்பாக இளைஞர்களை முன் வைத்து மக்கள் இயக்கம் ஒன்றை தமிழ்நாட்டுக்கான சமூகநீதி அணியாக உருவாக்கி அந்த அணி குறிப்பான செயல் திட்டங்களை வகுத்து மக்களிடம் செல்ல வேண்டும்; குறிப்பாகப் பெண்களை பெருமளவில் பங்கேற்கச் செய்ய வேண்டும். மதத்தின் பெயரால் மக்களின் சமூக வாழ்வுரிமைகளைப் பறித்து மீண்டும் வேதகால ஆட்சிக்கு அழைத்துச் செல்லும் சூழ்ச்சிகரமான திட்டங்களை அம்பலப்படுத்த வேண்டும்; அம்பானி, அதானி போன்ற பெரு முதலாளிகளிடம் மக்களின் பொதுத் துறை நிறுவன சொத்துகளை கொண்டுப் போய் சேர்த்து விட்டால் இந்துத்துவ பார்ப்பனிய ஆட்சிக்கான பொருளாதாரக் கட்டமைப்பை எளிதாக உருவாக்கிட முடியும் என்பதே பாசிச ஆட்சியின் நோக்கம் என்பதை எடுத்து விளக்க வேண்டும். மதத்தைக் குறித்துப் பேசாமலேயே தவிர்த்துவிட்டு மக்களை பாசிச எதிர்ப்புக்கு தயாராக்கிட முடியாது. மத விமர்சனங்களைப் புறந்தள்ளி விட முடியாது. இவை குறித்து விரிவான விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்.

பேரணியில் திரண்ட பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் சக்தியை வீணடிக்காமல் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். பார்ப்பனிய – முதலாளிய – சாதிய எதிர்ப்பு என்ற மூன்று முனைகளில் கவனம் செலுத்துவதே மார்க்சிஸ்ட் – பெரியாரிய – அம்பேத்கரிய கொள்கைகளை வளர்த்தெடுப்பதற்கான அடிப்படையான பணி.

# சாமியாடுவது அற்புத சக்தியாம்?

**எட்வின் பிரபாகரன்**

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியத்தின் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (9)**

‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020 ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**புதிர் 15:** 1995ஆம் ஆண்டு, செப்டம்பர் 21ஆம் நாள், தெற்கு புது டெல்லியில் உள்ள ஒரு கோயிலில் விநாயகர் சிலை, தும்பிக்கையின் மூலம் பாலை உறிஞ்சி விட்டதாக ஒரு செய்தி காட்டுத்தீ போல பரவியது. நாடெங்கும் பல விநாயகர் கோயில்களிலும் இதே சம்பவம் நடந்ததாக மக்கள் பரவசத்தோடு கொண்டாடினர். அறிவியலாளர்கள் அளித்த விளக்கம் என்னவென்றால், விநாயகர் சிலைகளில் உள்ள மிக நுண்ணிய துளைகளின் மூலமாக, தந்துகி எழுகை முறையால் (Capillary Rise method), பால் உறிஞ்சப்படுகிறது என்பதேயாகும். அன்று மாலைக்குள், இந்த விளக்கம் பிடிக்காததாலோ என்னவோ, விநாயகர் சிலைகள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டன.

தந்துகி எழுகை முறையில் இது நடக்குமானால், ஏன் இதற்கு முன் அப்படி நடக்கவில்லை என்ற கேள்விக்கும், அன்று மாலைக்குப் பின், ஏன் அது தொடரவில்லை என்பதற்கும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. பெண்கள் பால்குடம் எடுத்துக்கொண்டு ஊர்வலமாகப் போகும்போதும், கூழுத்தும்போதும், பலருக்கு ஆவேசம் வருவதையும், சாமியாடுவதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இப்படி எந்த புறக்காரணிகளும் இல்லாமல், ஒரு கூட்டத்தினரின் கற்பனையில் உருவாகி, அதை அவர்கள் உண்மை என்று நம்புகிற அளவுக்கு உடலில் மாற்றங்கள் ஏற்படும் நிகழ்வுகளுக்கு அறிஞர்கள், குழு இசைவு நோய் (Mass hysteria) என்று பெயரிட்டுள்ளனர். இந்நோயின் தாக்கம், ஒரு உடலில் இருந்து எப்படி பல உடல்களுக்கு பரவுகிறது என்பதற்கும், சிறிது நேரம் கழித்து உடல் தானா கவே எப்படி இதிலிருந்து விடுபடுகிறது என்பதற்கும், அறிவியலால் இன்று வரை விடை காண முடியவில்லை.

**விடை:** விநாயகர் சிலை பால் குடிப்பதற்கு தந்துகி எழுகை முறையை காரணமாக கூறினாலும், இந்த ஒன்று மட்டுமே காரணமல்ல. மேற்பரப்பு இறுக்கம், ஒரு செய்தியை உறுதிபடுத்துவதில் இருக்கும் ஒருசார்புத் தன்மை ஆகியவையும் பெரும் பங்காற்றியுள்ளன. மக்கள் தாங்கள் எது நடந்தது என்று நம்ப நினைக்கிறார்களோ, அதுவே நடந்ததாக சாதிக்கின்றனர். இதுவே ஒரு ஒட்டுமொத்த குழுவினரின் நம்பிக்கையாக இருக்கும்போது, அது அந்த குழுவையே நம்பிக்கை அடிப்படையில் உண்மைக்கு புறம்பான முடிவை எடுக்க வைக்கிறது.

சிலை பால் குடிக்கும் என்று குழுவாக நம்பி தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வது, கூட்டத்தை பார்த்தால் சாமியாடுவது, இத்தகைய குழு மனநோய்க்கான விளக்கத்தை 2002ஆம் ஆண்டு வெளியான British Journal of Psychiatry ஆய்விதழில், பார்தலொமியூ, சைமன் உள்ளிட்ட ஆராய்ச்சியாளர்கள், “Protean nature of mass sociogenic illness” என்ற கட்டுரையில் கூறியுள்ளனர். “இத்தகைய “கூட்ட வெறி” என்பது ஒத்திசைவுள்ள குழுவினருக்குள் வேகமாக நோய் அறிகுறிகளை உருவாக்கும். இது உருவாகுவதற்கு நரம்பு மண்டலத்தில் ஏற்படும் உற்சாகம், இழப்பு, பயன்பாட்டின் மாற்றம் ஆகியவையே காரணங்களாகும். இதனால் உடல்ரீதியாக ஏற்படும் தற்காலிக மாற்றங் களுக்கு குறிப்பிட்ட எந்த காரணமும் இல்லை. இடம் பொருள் ஏவலுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு குழுவின் செயல்பாடு களிலும் தற்காலிக மாற்றங்கள் தோன்றி மறையும்” என்று இக்கூர்மையான விளக்கத்தை, மனித மனங்களை ஆராய்ந்து கூறியுள்ளனர். எனவே மக்களின் இந்த மூடநம்பிக்கை செயல்கள் அறிவியல் விளக்கத்துக்கு அப்பாற்பட்டவையல்ல.

இன்னும் சில புதிர்கள் “அறிவியலுக்கு அப்பால்” நூலில் கூறப்பட்டுள்ளன. இவற்றுக்கும் தெளிவான அறிவியல் விளக்கங்கள் உள்ளன. அதுவும் இந்த நூல் எழுதப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கு முன்பே இந்த புதிர்களுக்கு முறையான பதில்கள் கிடைத்துவிட்டன. அவற்றையெல்லாம் கவனித்து இருந்தால், இந்த நூலை எழுத வேண்டிய அவசியமே வந்திருக்காது.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

## கோயில் கொள்ளை எங்கள் உரிமை!

பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூர் கிராமத்தில் காளிகோயில் சுடுமண் சிலைகளை ஒரு மர்ம நபர் உடைத்து விட்டார். இதைப் பிடித்துக் கொண்டு வேறு மதத்தினர் மீது பழி போட்டு அரசியல் நடத்தத் துடித்த பா.ஜ.க. வாயில் மண் விழுந்து விட்டது. இடித்தவர் நாதன் என்ற ‘இந்து’ என்று தெரிந்ததும், அண்ணாமலையின் அரசியல் ஆட்டம் கண்டு விட்டது. யு.டியூப் சேனல் நடத்தும் பா.ஜ.க.வின் கார்த்திக் கோபிநாத் என்ற புடம்போட்ட ‘ஆன்மீகக் கொழுந்து’ பக்தி உணர்ச்சி பொங்கி எழுந்ததால் தானே நிதி திரட்டி, சிலை புனரமைப்பு செய்யப் போவதாக அறிவித்து பல இலட்சம் நிதியையும் ‘கோபிநாத் கேர்’ நிதிக்கு திரட்டத் தொடங்கினார். அறநிலையத் துறை உடைக்கப்பட்ட சிலைகளை சீர் செய்யத் தொடங்கிய பிறகு அரசுத் துறையின் பெயரில் பணம் வசூல் செய்வது பக்கா மோசடி. அதனால் இப்போது ‘ஆன்மீகம்’ கைது செய்யப்பட்டவுடன் ‘நானும் ரவுடிடா’ அரசியலைத் தொடங்கியுள்ளார் பா.ஜ.க. பேர்வழி அண்ணாமலை கைதைக் கண்டித்து கம்பு சுத்துகிறார். இனி பாலம் கட்டுவது, ரோடு போடுவது போன்ற அரசு வேலைகளுக்குக்கூட பா.ஜ.க.வினர் மக்களிடம் போய் வசூல் கொள்ளை நடத்தினாலும் ஆச்சரியமில்லை. கேட்டால் எங்கள் இந்து நாட்டில் நாங்கள் கொள்ளை அடிக்க உரிமையில்லையா? எங்கள் இந்துக் கோயிலில் நாங்கள் வாரிச் சுருட்ட தடையா? அதோ, அங்கே சாலையில் ஓரமாக நடந்து போகும் இஸ்லாமியரைக் கைது செய்வாயா? தேவாலயத்துக்குப் போகும் கிறிஸ்துவர் மீது கை வைக்க துணிவு உண்டா? என்று வீரம் பேசக் கிளம்பி விடுவார்கள்.

இதேபோல் தில்லை நடராசர் கோயிலுக்குச் சொந்தம் கொண்டாடும் தீட்சதர்கள், கோயில் வரவு செலவு கணக்குகளை ஒழுங்காக வைத்திருக்கிறார்களா என்று ஆராய அறநிலையத் துறை ஒரு குழுவைப் போட்டிருக்கிறது. சும்மா சொல்லக் கூடாது; அமைச்சர் சேகர் பாபு வைக்க வேண்டிய இடத்தில் செம்மையாக வைக்கிறார், ஆப்பு!

‘இது நடராசனுக்கே அடுக்காது; எங்களிடம் கணக்கு வழக்கு கேட்கக் கூடாது; தீட்சதர்களாக நாங்கள் சிவபெருமானோடு வானுலகத்திலிருந்து வந்த பூதேவர்கள்; தின்று கொழுக்க வேண்டிய எங்கள் உரிமை. வாரிச் சுருட்ட இறைவன் எங்களுக்கு பட்டயம் எழுதிக் கொடுத்திருக்கிறார். இதோ, உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பார்!” என்று ‘திருத்தாண்டவம்’ ஆடுகிறார்கள்.

இந்த சுருட்டலும் ஊழலும் பல நூற்றாண்டு பாரம்பர்யம். இதில் கை வைக்க தி.மு.க.வுக்கு மட்டுமல்ல; அந்த ஆண்டவனுக்கே உரிமை கிடையாது. மு.க. ஸ்டாலின் முதலில் மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் திருட்டைத் தடுக்காதே; கொள்ளை அடிப்பதை முடக்காதே என்று மக்களைத் திரட்டி முற்றுகையிடுவோம். திருவாரூரைத் தொடர்ந்து சிதம்பரம் மாடல் போராட்டம் நடக்கும்” என்று அண்ணாமலை கூவினாலும் ஆச்சரியமில்லை.

அண்ணே; அண்ணாமலை அண்ணே; உங்க ‘தலைமைப் புரட்சி’ புல்லரிக்குதுண்ணே...

– கோடங்குடி மாரிமுத்து

# பார்ப்பனியத்தை தோலுரிக்கும் ஜாதி எதிர்ப்புப் படம் 'நெஞ்சுக்கு நீதி'

**ஆ. ராசா**

***தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, 'நெஞ்சுக்கு நீதி' படம் குறித்து உதயநிதி ஸ்டாலினுக்கு எழுதிய கடிதம்:***

தாங்கள் நடித்த 'நெஞ்சுக்கு நீதி' திரைப்படம் பார்த்தேன். திகைத்து மகிழ்ந்தேன். பொதுவாக திகைப்பில் மகிழ்ச்சிக்கு வாய்ப்பு குறைவு. ஆனால், ஒரு புதிய வேதியியல் மாற்றம் என்னை படம் பார்த்தபின் தொற்றிக் கொண்டதால் இருவேறுபட்ட பண்புகளைக் கொண்ட வார்த்தைகளை கோர்க்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானேன்.

'நெஞ்சுக்கு நீதி' திரைப்படத்தை தயாரிப்பதற்கும் அதில் நடிப்பதற்கும், வெளியிடுவதற்கும், வர்த்தகம் மட்டுமே நிச்சயமாக நோக்கமாக இருந்திட இயலாது என்பதை சாதியத்தால் கட்டமைக்கப்பட்ட இச்சமூக அமைப்பை உணர்ந்த 'பெரியார்வாதி' என்ற அடிப்படையில் உணர்கிறேன். இந்த திரைப்படம் வணிக நோக்கில் இலாபமா நட்டமா என்பதைவிட தமிழ் திரையில் இவ்வளவு அப்பட்டமாகவும், பட்டவர்த்தனமாகவும் சாதி பற்றிய புரிதலை - கண்ணோட்டத்தை - எவரும் இதுவரை தந்ததில்லை என்பதுதான் கொண்டாடப்பட வேண்டிய உண்மை.

மகாத்மா பூலே, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோர் சாதி பற்றிய ஆய்வுகளையும் தரவுகளையும் கால வரிசையில் ஆய்ந்து அதன் கட்டமைப்பை விளக்கியுள்ளனர். சாதி ஒழிந்த சமூகத்தின் மீது அக்கறை கொண்ட இன்றைய இளைஞன் ஒருவன் குறைந்தது பத்தாண்டுகள் சாதி குறித்து படித்து தேர்ந்தபின்பு பெறவேண்டிய தெளிவை இப்படம் வலிய சென்று ஊன்றி உணர்த்தியிருக்கிறது. காவல் உதவி ஆணையாளராக படத்தில் வரும் உங்கள் பாத்திரத்திற்கு முன்னால் நிற்கும் மற்ற காவலர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சாதியை அடையாளப்படுத்தியும் பெருமைப் படுத்தியும் சிலாகித்து பேசுகின்ற காட்சியில் பெரும் வரலாற்று ஆய்வு பொதிந்து கிடக்கிறது.

அம்பேத்கர் தன்னுடைய 23வது வயதில் (1916) கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஆய்விற்கு அனுப்பிய 'இந்தியாவில் சாதிகள்: தோற்றமும், வளர்ச்சியும் மற்றும் இயக்கமும்' (Caste in India: Genesis, Mechanism and Development) என்ற கட்டுரை அங்கு வாசிக்கப்பட்டபோது அவருக்கு வசப்பட்டது முது முனைவர் பட்டம் மட்டுமல்ல; இந்தியாவின் சாதி குறித்த பார்வை உலகிற்கும் வியப்பூட்டியது; நிறவெறியும் இனவெறியும் உலகில் நீண்ட வரலாற்றுக்கு சொந்தமானவை என்றாலும், அவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டு எந்த புலனுக்கும் அகப்படாத சாதி! அடையாளம் பிற நாட்டினரை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. அந்த அதிர்ச்சியை பெரியார் தமிழ் மண்ணில் வெடிக்கச் செய்து புரட்சி செய்தார். திராவிட இயக்கம் முன்னெடுத்த இந்த சாதி ஒழிப்பு இன்று முனை மழுங்கிவிட்டதோ என்று முற்போக்கு சிந்தனை யாளர்களே கலக்கம் அடைந்துள்ளபோது, நெஞ்சுக்கு நீதி! திரைப்படம் கலக்கம் விலக்கும் ஒளிக்கீற்று! படத்தில் வரும் காவலர்கள் தாங்கள் யாருக்கு மேல் யார் என்ற சாதி பெருமிதத்தில் கவனமாய் - கட்டுப்பாடாய் இருப்பதை காட்சிப் படுத்தியபோது சாதியின் உண்மையான கோரமுகம் மட்டுமல்ல; இன்றும் நீடிக்கும் ஈனமான தத்துவம் என்பதை கச்சிதமாய் காட்சிப்படுத்தியது பாராட்டுக் குரியது.

சுருக்கம் இதுதான்; எல்லோரும் ஒரு தொழிலை மட்டுமே செய்தால் சமுதாயத் தேவைகள் நிறைவேறாது; தேவைகள் நிறைவேற்றப்படாத சமூகம் அமைதியாய் இருக்காது. எனவே 'தொழில் பிரிப்பு'! (Division of Labour) என்பது தேவை மட்டுமல்ல; இன்றியமையாததும்கூட எனவே இந்தியா தவிர எல்லா நாடுகளிலும் தொழில் பிரிக்கப்பட்டு சமுதாயத்தின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. அதில் பேதமில்லை; உளவியல் பாரபட்சமில்லை; சமத் தன்மை இல்லை; தொழிலை மாற்றிக் கொள்ளும் வசதி உண்டு. ஏற்றுக் கொண்ட எந்த தொழிலும் அங்கு பிறப்பால் வருவதில்லை; இழிவானதுமில்லை. ஆனால், இந்தியாவில் அன்றைய 'சனாதனம்' - இன்றைய 'இந்துத்துவா - போதிப்பது தொழிலாளர்கள் பிரிப்பு' (Division of Labourers). பிறவி அடிப்படையில் அவர்கள் மேல் குறிப்பிட்ட ஒரு தொழிலை சுமத்துவதோடு நில்லாமல் - அவர்களை கல்வி மறுக்கப்பட்டவர்களாய், நாகரீகம் பெற முடியாதவர்களாய், உரிமைகள் பறிக்கப்பட்டவர் களாய் - சூத்திரர்களாய் - பஞ்சமர்களாய் - பிற்படுத்தப்பட்டவர்களாய்,




ஒடுக்கப்பட்டவர்களாய் சமூகத்தில் அட்டவணைப் படுத்துகிறது.

மேலும், மற்ற நாடுகளில் உள்ள 'தொழில் பிரிப்பு' (Division of Labour) ஒன்றுக்கு அடுத்து ஒன்று என்ற வரிசை (Horizontal) அமைப்பு. வரிசையில் வசதிகேற்ப ஒருவர் இடம்மாறி நிற்கலாம்; நிற்க முடியும். ஆனால் 'தொழிலாளர்கள் பிரிப்பு' (Division of Labourers)! ஒன்றின் மேல் ஒன்று என்ற செங்குத்து (Vertical) அடுக்கு அமைப்பு. அந்த அமைப்பில் யார் மேல் யார் கீழ் என்பதுதான் சாதி அடையாளம்; வெற்று பெருமிதம். இதைத்தான் தன் ஆய்வில், சாதிய அடுக்கில் மேலே செல்ல செல்ல ஒரு சாதிக்கு மதிப்பும் பெருமிதமும், கீழே வரவர ஒரு சாதிக்கு இழிவும் வந்து சேர்கிறது (Ascending order of reverence and descending order of contempt) என்று அம்பேத்கர் தன் ஆய்வில் நிறுவினார். இந்த ஆய்வை அசாத்தியமாய் நான்கய்ந்து காவலர்களை பேச வைத்து காட்சிப்படுத்தியது சாதி ஒழிந்த சமூகத்தை இங்கு காண விரும்பி உழைத்து மறைந்த பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோருக்கு தரப்பட்ட கொள்கைப் படையல். இந்த காட்சி தரும் சமூக உண்மையை ஏற்றுக் கொள்ள இன்றும் பலருக்கு தயக்கமிருக்கும். ஆனால், அவர்களின் மனசாட்சிக் கூட மறைமுகமாக தங்களை நகைக்கும் அளவில் படத்தின் காட்சி அமைந்துள்ளது.

சாதி குறித்த வாதப்பிரதிவாதங்களை இப் படத்தில் காட்சிப்படுத்தியது நுட்பமான உத்தி. எல்லோரும் சமமல்ல என்ற சாதிய மனம் தலை தலைமுறையாக கட்டமைக்கப்பட்ட இச்சமூகத்தின் குரலை உங்கள் காவலர் ஒருவர் வெளிப்படுத்துகிறார்:

**'எல்லோரும் சமம் என்றால் யார் அரசனாக இருப்பது' என்று உங்களிடம் பணிபுரியும் காவலரின் கேள்விக்கு 'எல்லோரும் சமம் என்று நினைப்பவர் தான் அரசனாக வரவேண்டும்' என்ற பதில் எவ்வளவு புரட்சிகரமானது: 'ஜன நாயகம் என்பது ஒரு அரசாங்கத்தை தேர்ந் தெடுப்பது மட்டுமல்ல; அது சக மனிதனுக்கு உரிய சமத்துவத்தையும் மதிப்பையும் தருவது' என்றார் அறிஞர் அண்ணா. அந்த வாசகங்களை ஒற்றை வரியில் காட்சிப்படுத்தியதை எண்ணி வியந்து மகிழ்ந்தேன்.**

காவல் உதவி ஆணையாளராக உங்களோடு பணியாற்றிய அனைத்து காவல் அலுவலர்களுக்கும் தங்களின் அரசாங்கத்து பதவியைவிட சாதியை பெரிதாக கருதி பெருமிதம் கொள்வதை வெறும் படக் காட்சி என்று ஒதுக்க இயலாது. அந்த வறட்டுப் பெருமிதம் இன்னும் அரசு நிர்வாகத்தில் புரை யோடிப்போய் உயிர்ப்போடு இருக்கிறது என்பது தான் உண்மை. அடுக்குகளாய் கட்டமைக்கப்பட்ட சாதிய சமூக அமைப்பில் கடைசி அடுக்கில் இருக்கும் துப்புரவுப் பணியாளர்களின் அவலநிலையை காட்சிப்படுத்தியதோடு நில்லாமல், அவர்கள் சந்திக்கும் சவால்களை நெஞ்சுக்கு நீதி! தோலுரித்து காட்டியிருக்கிறது. இந்த சாதிய 'அடுக்கு கட்டமைப்பை' பிராமணியம்தான் எப்போதும் இப்போதும் தலைமை தாங்குகிறது என்பதை படத்தின் கடைசி பாகத்தில் குறியீடாய் காட்டப்பட்டுள்ளது மனங்கொள்ளத்தக்கது. ஆம், படத்தில் வரும் எதிரிகள் எல்லோரின் குற்றங்களுக்கும் சாதிப் பெருமையும் சிறுமையும் காரணமாய் இருந்தாலும், அவற்றிற்கு தலைமை தாங்கியது பிராமணராக வரும் காவல் ஆய்வாளர் சுந்தரம் (அய்யர்). சுந்தரம் வெறும் தனிமனித கதாப்பாத்திரமல்ல; குறியீடு அவரை தனி நபராக கருதி அந்த முழு சமூகத்தையும் ஏளனம் செய்வது அறிவுடைமை ஆகாது. அந்த பாத்திரம் ஒரு தத்துவம்.

ஏற்கவியலாத தத்துவம். 'நான் பிராமணியம் என்று குறிப்பிடுவது ஒரு சமூகத்தையோ அவர்கள் பெற்றிருக்கும் அந்தஸ்தையோ அனுகூலத்தையோ அல்ல; நான் குறிப்பிடும் பிராமணியம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை மறுதலிப்பது' என்றார் அம்பேத்கர். அவைகளை மறுதலிக்க காரணமாக இருந்த சுந்தரம் எனும் காவல் ஆய்வாளர் பாத்திரம் மற்ற சமூகங்களின் சமத்துவத்தை சுதந்திரத்தை எப்படி கையாண்டு கதை முடிந்தது என்பதும், அந்த சூழ்ச்சி எப்படி காவல் உதவி ஆணையாளராக உங்களால் கண்டறியப்பட்டு வெல்லும் காட்சி சமூகத்தின் தீர்வுக்கான குறியீடு.

'மானமும் அறிவும் மனிதருக்கு அழகு' என்றார் பெரியார்; 'உலக சகோதரத்துவத்தை' (Universal brotherhood) வலியுறுத்தினார் அம்பேத்கர். மானுடம் போற்றும் இவ்விரு சிந்தனையாளர்களின் கூற்றை எவரும் புறந்தள்ள முடியாது; கூடாது. ஆனால் அதை சொன்னதற்காக அவர்கள் கம்பிக் கூண்டுக்குள் சிறைபட்டு கிடக்கும் முரணை போகிற போக்கில் இடித்துரைக்கும் காட்சியை தமிழக முதல்வரும், அரசும் புறந்தள்ளிவிடக் கூடாது.

'நமக்கு என்னென்ன பெருமைகள், வசதிகள், தேவைகள் வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ அத்தகைய பெருமைகள், வசதிகள், தேவைகள் மற்றவர்களுக்கும் வரவேண்டும் என்று விரும்புவதும், அதற்காக உழைப்பதும்தான் மனித நாகரீகம்! என்றார் பெரியார். அந்த நாகரீகத்திற்கு எதிராக கையாளப் படும் தீண்டாமை எனும் 'தீட்டு' அறிவியலிலும் அனுபவத்திலும் பொய் என்பதை லாவகமாக கையாண்டது சிறப்பிலும் சிறப்பு. சாதியும் தீண்டாமையும் பார்வைக்கு புலப்படும் பௌதீகப் பொருளல்ல (Physical object); அது மூளையில் பதிக்கப்பட்ட வன்மம் (State of mind/notion). அந்த வன்மம் குறித்த எதார்த்த விமர்சன காட்சிகள் பலரை சிந்திக்க வைத்திருக்கும்; வைத்திருக்க வேண்டும்.

மதம் வேண்டாம், சாதி வேண்டாம் என்று சொல்ல வந்த திரைப்படங்கள் உண்டு; 'ஒரே ரத்தம்' தொடங்கி 'ஜெய் பீம்' வரை முயற்சிகள் பல. அவைகள் சாதி இந்த சமூகத்தின் அவமானம் என்று சொல்ல வந்தவை; பாராட்டுக்குரியவை. ஆனால், 'நெஞ்சுக்கு நீதி' இந்திய சாதிய அமைப்பை வரலாற்று உளவியல் பின்புலத்தோடு ஆராய்ந்து, வரையறைப்படுத்தி - அந்த கட்டுமானம் ஏற்படுத்தும் காயங்களையும் - காயங்களின் வலிகளையும் முழுவதுமாக காட்சிபடுத்தி தீர்வையும் தந்த ஒரு படம்; ஒரே படம். பரவலாக வெகு மக்களின் மனங்களில் இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கும் 'சாதி' இப்படத்திற்கு வணிக வெற்றியை அளித்திடுமா எனும் அய்யம் எனக்கும் உண்டு.

'உதயநிதி இதை தவிர்த்திருக்கலாம்' எனும் குரல் மெலிதாக ஒருபுறம் கேட்கவும் வாய்ப்புண்டு. இப்படி ஒரு தர்க்கம் வரும் என்று உங்களுக்கு எவரேனும் எச்சரிக்கை செய்யாமல் இருந்திருக்க முடியாது. என்றாலும், இப்படம் இன்றைய தேவை என்பதை உணர்ந்து உவந்தளித்த உங்களின் உள்ள வலிமையை பாராட்டமலிருப்பது பகுத்தறிவாளர்களின் பண்பாகாது.

இறுதியாக, 'இந்த நாட்டில் உண்மையிலேயே ஒரு மனிதன் பொதுத் தொண்டு ஆற்ற வேண்டும் என்று கருதுவானேயானால் அவன் முதலாவதாக செய்ய வேண்டியது சாதியை ஒழிக்க பாடுபடுவதும் மக்களின் இழிநிலையையும் மடமையையும் ஒழிக்க பாடுபடுவதும்தான்' என்றார் பெரியார்.

இந்தப் படத்தின் வாயிலாக உங்களுக்கு பொதுத் தொண்டு ஆற்ற எல்லா தகுதியும் உரிமையும் மட்டுமல்ல; வீரியமும் விவேகமும் உண்டு என்று கண்டுணர்ந்து பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

'நெஞ்சுக்கு நீதி' வெல்லட்டும்!

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# 2024 தேர்தல் களத்தில் இந்தி வெறியைத் திணிக்க பா.ஜ.க. திட்டம்

பிள்ளையை கிள்ளி விட்டு, தொட்டிலை ஆட்டி விடுவது' என்ற பழமொழி ஒன்றிய பாஜ அரசுக்கு கனகச்சிதமாக பொருந்தக் கூடியது. ஒருபுறம், தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளின் சிறப்புகளை பெருமையாக பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் பிரதமர் மோடி. ஆனால் மறுபுறம், இந்தியை தேசிய மொழியாக்க அமித்ஷா போன்ற பாஜ தலைவர்கள், வரிந்து கட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமித்ஷா, 'இந்தியாவில் அனைத்து பகுதியிலும் உள்ள மக்களின் தகவல் தொடர்பு மொழியாக இந்தி இருக்க வேண்டும். ஆங்கிலமாக இருக்கக் கூடாது. நாங்கள் மாநில மொழிகளுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆங்கிலத்திற்கு மாற்றாக இந்தியை கொண்டு வர வேண்டும் என நினைக்கிறோம்,' என இந்தி திணிப்புக்கு புது விளக்கத்தை தந்தார். இதற்கான காய் நகர்த்தல் டெல்லியில் இருந்து தொடங்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புதுடெல்லி நகராட்சி கவுன்சிலில் தனது அனைத்து துறைகளுக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது. அதில், 'அலுவல் மொழி அனைத்துமே இந்தியில் மட்டுமே இருக்க வேண்டும், அறிவிப்புகள் அனைத்தும் இந்தியில் மட்டுமே வெளியிடப்பட வேண்டும், பெயர் பலகைகள் அனைத்தும் இந்தி மொழியில் இருக்க வேண்டும்' என உத்தரவிடப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற உத்தரவுகள் நாடு முழுவதும் பரவலாக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆனால், ஆங்கிலத்தை ஒதுக்கி விட்டு இந்தியை கொண்டு வர முடியுமா? இந்தி திணிக்கப்பட்டால், இந்தி பேசாத தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் எத்தகைய கொந்தளிப்புகள் ஏற்படும் என்பதை அறியாதவர்கள் அல்ல பாஜ மேலிட தலைவர்கள். ஆங்கிலத்தின் பரவல் அந்த மொழியை ஜனநாயகப்படுத்தி உள்ளது.

ஒருகாலத்தில் மேல்தட்டு மக்கள் மட்டுமே பேசக்கூடிய மொழியாகவும், நடுத்தர, கீழ்த்தட்டு மக்கள் அஞ்சி ஒதுங்கக் கூடிய மொழியாகவும் இருந்த ஆங்கிலம், இன்று அனைவரின் நாக்கிலும் தாண்டவமாடுகிறது. இதற்கு முக்கிய காரணம், கற்றல், வேலை வாய்ப்பு. புதிய விஷயங்களை அறியவும், வேலை வாய்ப்புக்கும் ஆங்கிலம் இன்றியமையாததாக உள்ளது. கால்சென்டர்கள் முதல் கார்ப்பரேட் வேலைகள் வரை அனைத்திற்கும் ஆங்கிலம் அவசியம் தேவை. நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப நம்மை செதுக்கிக் கொள்ளவும் ஆங்கிலம் தேவைப்படுகிறது.

ஆங்கிலம் ஒருகாலத்தில் மேல்தட்டு மக்கள், சக்தி வாய்ந்தவர்கள், பணக்காரர்களின் மொழியாக இருந்திருக்கலாம். ஆனால், இப்போது அது அனைவருக்கும் அதிகாரமளிக்கும் மொழியாக மாறி உள்ளது. ஆங்கில வழிப் பள்ளிகள் நாடு முழுவதும் பெருகி உள்ளன. பலவற்றிற்கான தேவை இருப்பதால் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் ஆங்கில மொழியை கற்க வேண்டுமென விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட ஆங்கிலத்திற்கு பதிலாக இந்தியை திணிக்கும் அமித் ஷா போன்ற தலைவர்களின் பேச்சு, எவ்வளவு பிற்போக்குத்தனமானது என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

அதே சமயம், இந்தி திணிப்பை பாஜ மேற்கொள்வது இது ஒன்றும் புதிதல்ல. கடந்த 2019ம் ஆண்டு மக்களவை தேர்தல் வரும் முன்பாக, 2017ல் இதே போல் இந்தி திணிப்பு முயற்சியை மேற்கொண்டனர். ஆனால், பல மொழி ஆர்வலர்கள், மாநில அரசுகளின் எதிர்ப்பால் பின்வாங்கியது. இப்போது மீண்டும் 2024 மக்களவை தேர்தல் நடக்க உள்ள நிலையில், பாஜவின் தேர்தல் ஆயுதமாக இந்தி இருக்கலாம் என அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இம்முறை பாஜ.வும் அதன் இணை அமைப்புகளும் இந்தி விஷயத்தில் மிகத் தீவிரமாக உள்ளன. இதன் விளைவுதான் சமீபத்தில் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அலுவல் மொழியாக இந்தி இருக்கும் என அறிவிப்பு வெளியானது. ஆங்கிலத்திற்கு பதிலாக அனைத்து அலுவல் செயல்பாடுகளும் இந்தி மொழியிலேயே மேற்கொள்ளப்படும் என்ற ஒன்றிய அரசு, தமிழகத்திலும், புதுச்சேரியிலும் கடும் கண்டனத்தை பெற்றன. இதே போல், உபி அமைச்சர் சஞ்சய் நிஷாத், 'இந்தி பேசத் தெரியாதவர்கள் இந்தியர்களே அல்ல, வெளிநாட்டினர்' என்றார்.

அமித்ஷா கட்டுப்பாட்டில் உள்ள ஒன்றிய உள்துறை அமைச்சகம், நாடு முழுவதும் உள்ள தனது அலுவலகத்தில் 80 சதவீதம் பேர் இந்தி அலுவல் மொழியில் பணியாற்றும் திறனை பெற்றிருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. எப்போதுமே சர்ச்சையை கிளப்பி விட்டு அவை எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்த்து, எதிர்ப்பு அதிகமாக இருந்தால் அவற்றை கைவிடுவதுதான் பாஜவின் தந்திரம். அந்த வகையில் தற்போது இந்தியை ஆயுதமாக்கி, மொழி ஊக்குவிப்பு என்ற கோஷத்தின் மூலம், இந்துத்துவா அமைப்புகள் நாட்டை துண்டாக்கி, வாக்கு வேட்டையாட முயற்சிக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்தி தெரிந்திருப்பது வேறு, அதை அமல்படுத்துவது வேறு. மக்கள் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாத அப்பாவிகள் என்று ஆட்சியில் இருப்பவர்கள் நினைத்தால், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வார்கள். மக்களை முட்டாளாக்க முடியாது என்பதை இந்தியை திணிக்க முயலும் அரசியல் தலைவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் அரசியலமைப்பின் அடிப்படை பலம் பன்மைத்துவம். இந்தி ஏகாதிபத்தியத்தை திணிப்பதாக கூறுவது நாட்டின் ஒற்றுமையைதான் குலைக்கும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**முதலிடத்தில் பெங்காலி :** இந்திய அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் இந்தி உள்ளிட்ட 22 மொழிகள் பட்டியலிடப்பட்டு உள்ளன. இதனை அலுவல் ரீதியாக பயன்படுத்த முடியும். இந்திய அரசியலமைப்பு சட்டமானது, இந்தி உட்பட எந்த மொழியையும் தேசிய மொழியாக அங்கீகரிக்கவில்லை. 2011ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களின்படி, இந்தி தவிர 8ஆவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளைத்தான் 64 கோடி பேர் பேசுகின்றனர். இதில் முதலிடத்தில் பெங்காலி மொழி உள்ளது. நாட்டில், 8.03% பேர் பெங்காலி பேசுகின்றனர். தமிழ் 4வது இடத்தில் உள்ளது.

## மனுவாதம் சாகவில்லை; ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறது

ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகும் நாட்டில் மனுவாதம் ஆட்சி செய்வது கொடுமையானது என்றும் மநுவாதத்தை ஏற்றக்கொண்டவர்கள்தான் ஒன்றியத்திலும் உத்தரப்பிரதேசத்திலும் ஹரியானாவிலும் ஆட்சி செய் கிறார்கள் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சுபாஷினி அலி குற்றம்சாட்டினார். சாதி ஆணவப்படுகொலைக்கு எதிராக சட்டம் இயற்றக்கோரி சென்னை சைதாப்பேட்டையில் சனிக்கிழமை (மே 28) தமிழ் நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அவர் பேசியதாவது:

“அனைத்தையும் சாதிய கண்ணோட்டத்தோடு பார்ப்பவர்கள் கலப்பு திருமணத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். நமது நாட்டின் அரசியல் சாசனத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கர், பருவ வயதை எட்டிய ஆணோ பெண்ணோ அவர்கள் தாங்கள் விரும்பியவர்களைத் திருமணம் செய்துகொள்ளச் சட்டத்தில் இடம் உண்டு'' என்று கூறினார்.

ஆனால் நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகியும் கலப்பு திரு மணத்தை ஒருசிலர் ஏற்க மறுக்கிறார்கள். தற்போதைய ஆட்சியாளர்கள் அம்பேத்கர் சிறந்த தலைவர், அரசியல் சாசன சிற்பி என்றெல்லாம் அவரை புகழ்ந்து கொண்டே மறு புறம் அவர் இயற்றிய அரசி யல் சாசனத்தைக் காட்டிலும் மநு வாதத்திற்கு சேவகம் புரிபவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் கலப்பு திருமணத்தை எதிர்க்கிறார்கள். ஆதிக்கச்சாதியைச் சேர்ந்த ஒரு ஆண் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்தால் பரவாயில்லை என்று கூறுபவர்கள், ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த பெண் ஒடுக்கப்பட்ட சமூ கத்தைச் சேர்ந்த ஒரு வாலிபரைத் திருமணம் செய்தால் அய்யோ ராமா என்று கூச்சல் போடுகிறார்கள்.

திருமண வயது தொடர்பான சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு 7வயதில் 9 வயதில் பெண்களைத் திருமணம் செய்த காலம் உண்டு. திருமணம் முடிந்தவுடன் பெண்களைப் படிக்க அனுப்பமாட்டார்கள், அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்க மாட்டார்கள். ஆண்களால் வீட்டிலேயே அடக்கி வைக்கப்பட்டனர். வர்ணாசிரமம் என்ற பெயரில் பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகள் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இன்றும் தொடர்வது வேதனையளிக்கிறது

காதலுக்கு நேரமில்லை என்று படம் எடுத்த தமிழகத்தில் கலப்பு திருமண காதலர்கள் உயி ருக்கு உத்தரவாதம் இல்லை. குழந்தைகள் மீது பெற்றோர் அதிக அன்பு வைத்துள்ளார்கள். அவர்கள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆனால் அதே பெண் வேறு ஒரு சாதியை சேர்ந்த நபரை காதலித்து திருமணம் செய்து கொண்டால் அந்த பெண்ணை கொலை செய்யவும் அதே பெற்றோர் தயங்குவதில்லை. எனவேதான் ஆணவப்படுகொலைக்கு எதிராக சட்டம் இயற்றுமாறு மார்க்சிஸ்ட் கட்சி யும் தீண்டாமை ஒழிப்பு முன்ன ணியும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. பெரியார் பிறந்த இந்த மண்ணில், சமூக நீதி நிலை நாட்டப்பட்ட இந்த மண்ணில் சாதி ஆதிக்கத்திற்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

## சென்னை கழகத்தினர் முயற்சி வெற்றி; தெருக்களில் ஜாதிப் பெயர்கள் நீக்கப்படுகின்றன

சென்னை மயிலாப்பூர் கழகத் தோழர்கள், தெருக்களில் ஜாதிப் பெயர்களை நீக்கக்கோரி கடந்த ஏப்.6ஆம் தேதி மாநகராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை மனுவை வழங்கியதைத் தொடர்ந்து நகரம் முழுதும் ஜாதிப்பெயைர நீக்கும் பணிகளை சென்னை மாநகராட்சி தொடங்கியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 10,000-க்கும் மேற்பட்ட தெருக்கள் உள்ளன. இந்த தெருக்களின் பெயர்ப் பலகைகளை சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் மாற்றியமைக்கும் பணியை சென்னை மாநகராட்சி செய்து வருகிறது.

இதன்படி ரூ.8.43 கோடி செலவில் தெருக்களின் பெயர் பலகைகள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் இலச்சினை, தெருவின் பெயர், வார்டு, பகுதி, மண்டலம், அஞ்சல் குறியீட்டு எண் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இந்தப் பெயர் பலகைகளில் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தப் பணியுடன் சேர்த்து தெருக்களின் பெயர்களில் உள்ள ஜாதிப் பெயர்களை நீக்க தொடங்கி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதை உறுதிப்படுத்தும் விதமாக 171-வது வார்டில் உள்ள சாலையின் பெயரை சென்னை மாநகராட்சி மாற்றியமைத்துள்ளது.

13ஆவது மண்டலம், 171 வார்டில் உள்ள ஒரு தெருவுக்கு அப்பாவு கிராமணி 2ஆவது தெரு என்று பெயர் இருந்தது. இந்தப் பெயரை மாற்றக் கோரி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கடந்த ஏப்ரல் 6ஆம் தேதி, மாநகராட்சி உதவிப் பொறியாளர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தப் பெயரை மாற்றி சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி தற்போது இந்தச் சாலைகளின் பெயர் அப்பாவு (கி) தெரு என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஜாதிப் பெயர்கள் நீக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சியின் பணியை வரவேற்று பாராட்டுகிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 02nd June 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN